# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 92 — 1973 දෙසැම්බර් 28 වැනි සිකුරාදා — 1973.12.28

92 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... | ... 1391 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | ... 1401 |


*கவனிக்க.—ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) சட்டமூலமும், வெளிநாட்டுச் செலாவணி தொடர்பில் மன்னிப்பளித்தல் (திருத்தம்) சட்டமூலமும், உள்ளூர்க் கடன்களும் அபிவிருத்தியும் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/ சோதனைக்கான நியமனங்கள் நிறுத்திவைக்கப்பட்ட " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

---

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 2** அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்ப்போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காதுவிடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

7 : 1 எல்லாத் தகைமைகளேயும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினுல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டிபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும் ; அதில், பதில் வேதனம் படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**இலங்கைக் கடற்படையில் அலுவலர்க்கான வெற்றிடங்கள்**

1 நிரந்தரக் கடற்படைப்பகுதியில் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) துணைநிலை அலுவலர் (பொறியியல் நிபுணத்துவம்) ("பொ") ;

(ஆ) பயிலுநர் அலுவலர் (நிறைவேற்றுக்கிளை) ("நி") ;

(இ) பயிலுநர் அலுவலர் (பொறியியல் நிபுணத்துவம்) ("பொ") ;

(ஈ) பயிலுநர் அலுவலர் (வழங்கல் நிபுணத்துவம்) ("வ") ;

குறிப்பு.—மேற்கூறிய (ஆ) கடலோடிக்கான பயிற்சிகளுக்கும் மற்றும் கப்பற்றுறை சார்ந்த கடமைகளுக்குமாகும்.

2. அபேட்சகர்கள் இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும்.

3. தகைமைகள் :

| | துணைநிலை அலுவலர் (பொ) | பயிலுநர் அலுவலர் (நி) | பயிலுநர் அலுவலர் (நி) | பயிலுநர் அலுவலர் (வ) |
|---|---|---|---|---|
| (அ) வயது : | 1974.1.1 ஆம் திகதி 28 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் | 1974.1.1 ஆம் திகதி 15 வயதுக்குக் குறையாமலும் 21 வயதுக்கு மேற்படாது மிருத்தல் வேண்டும் | | |
| (ஆ) உடல்தகைமை : | | | | |
| உயரம் | 5′4″ | 5′6″ | 5′6″ | 5′6″ |
| நிறை : | 105 இரு. | 110 இரு. | 110 இரு. | 110 இரு. |
| நெஞ்சகலம் (விரியாத நிலை) | 32″ | 32″ | 32″ | 32″ |
| தூரப்பார்வை | கண் ஒவ்வொன்றுக்கும் | கண் ஒவ்வொன்றுக்கும் | கண் ஒவ்வொன்றுக்கும் | கண் ஒவ்வொன்றுக்கும் |
| நிறம்காண்தேர்வு | 6/9′ II ஆம் தரம் | 6/6′ II ஆம் தரம் | 6/9′ II ஆம் தரம் | 6/12′ II ஆம் தரம் |

குறிப்பு.—மேற்கூறியவற்றோடு சித்திபெற்ற அபேட்சகர்கள் தேர்வின் முன் கடற்படைத் தளபதியின் திருப்திக்கிணங்க, வைத்தியப் பரிசோதனையொன்றிற்கு உட்படுத்தப்படுவர்.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) திருமணமானவரா தனியாளா : | திருமணமானவர்/தனியாள் | திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும் | திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும் | திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும் |

(ஈ) கல்வி/தொழில் தகைமைகள் :—

(i) துணைநிலை அலுவலர் (பொ) :

நன்கு மதிக்கப்படும் சர்வகலாசாலையொன்றில் இயந்திரப் பொறியியல் பட்டதாரியாயிருத்தல் வேண்டும். இறுதித் தேர்வில் தோற்றிச் சித்தியெய்திய பாடங்களுள் இயந்திரப் பொறியியல் நிபுணத்துவம் சம்பந்தமான பாடங்களும் அடங்கியிருத்தல் விரும்பத்தக்கது.

அல்லது,

இன்ஸ்டிட்யூட் ஒப் மெக்கனிக்கல் என்ஜினியரிங் (இலண்டன்) அல்லது இன்ஸ்டிட்யூட் ஒப் மெரையின் என்ஜினியரிங் (இலண்டன்) இல் ஓர் அங்கத்தவர்/இணைந்த அங்கத்தவர்.

அல்லது,

இன்ஸ்டிட்யூட் ஒப் மெக்கனிக்கல் என்ஜினியர்ஸ் அல்லது மெரயின் என்ஜினியர்ஸ் (இலண்டன்)க்கோ இதற்குச் சமமானவற்றிற்கோ வேண்டப்படும் கல்வித்தகைமைகளைக் கொண்டுள்ள (இலங்கை) பொறியியல் நிறுவனத்தில் ஓர் அங்கத்தவராகவோ/இணைந்த அங்கத்தவராகவோ இருத்தல் வேண்டும்.

**(ii) பயிலுநர் அலுவலர் (றி) :**

சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகியவற்றில் ஒன்றுடன் கல்விப்பொதுத் தராதர (சாதாரணதர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் 2 க்கு மேற்படாத தடவைகளில் பின்வரும் பாடங்களில் குறைந்தது 3 இல் ஆவது திறமைச்சித்தி பெற்றிருத்தல் :—

| | |
|---|---|
| தூயகணிதம் | பௌதிகவியல் |
| பிரயோககணிதம் | இரசாயனவியல் |
| உயிரியல் | |

அல்லது,

விஞ்ஞானத்தில் உயர்தர தகைமையொன்று பெற்றிருத்தல்.

**(iii) பயிலுநர் அலுவலர் (பொ) :**

சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகியவற்றில் ஒன்றுடன் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் 2 க்கு மேற்படாத தடவைகளில் பின்வரும் பாடங்களில் குறைந்தது 4 இல் ஆவது திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் :—

| | |
|---|---|
| தூயகணிதம் | இரசாயனவியல் |
| பிரயோககணிதம் | பௌதிகவியல் |
| கேத்திரகணிதப் பொறிமுறைவரைதல். | |

அத்துடன்,

கல்விப்பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சையில் பின்வரும் பாடங்களில் 3 இல் சித்தி பெற்றிருத்தல்.

| | |
|---|---|
| தூயகணிதம் | பௌதிகவியல் |
| பிரயோககணிதம் | இரசாயனவியல் |

அல்லது

கல்விப்பொதுத்தராதர (உயர்தர)ப் பரீட்சைக்குப் பதிலாக மேற்கூறிய பாடங்களில் உயர்தர தகைமை பெற்றிருத்தல்.

**(iv) பயிலுநர் அலுவலர் (வ) :**

பின்வரும் பாடங்களில் ஏதாவது 3 இல் திறமைச் சித்தியுடன் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகியவற்றில் ஒன்றுடன் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் :—

| | |
|---|---|
| வர்த்தகம் | தூயகணிதம் |
| பொருளாதாரம் | பிரயோககணிதம் |
| கணக்கியல் | பௌதிகவியல் |
| எண்கணிதம் | இரசாயனவியல் |
| வர்த்தக எண்கணிதம் | |

அல்லது,

உயர்தர தகைமையொன்று பெற்றிருத்தல்.

4. **சம்பளமும் படிகளும்**—கடற்படைச் சம்பளக் கோவையில் விதிக்கப்பட்டவாறு தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் தமது பதவிக்குரிய சம்பளமும் படிகளும் நியமிக்கப்படும் காலத்தில் கொடுக்கப்பெறுவர்.

(அ) ஏவுநர் பதவி வரையுள்ள உத்தியோகத்தருக்குக் கொடுக்கப்பட்டுவரும் ஆயுதந் தாங்கிய படைகளின் சம்பளக் குழுவினல் விதப்புரை செய்யப்பட்ட ஒன்றுதிரட்டிய சம்பள விகிதங்கள் பின்வருமாறு :—

பயிலுநர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 5,160 ;

கப்பல் நடுத்தரப் பணியாளர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 5,520 ;

பதில் உதவித்துணைநிலை அலுவலர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 5,880 ;

உதவித்துணைநிலை அலுவலர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 7,500 தொடங்கி ரூபா 180 கொண்ட 5 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 8,400 வரை ;

துணைநிலை அலுவலர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 9,240 தொடங்கி ரூபா 180 கொண்ட 8 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 10,680 வரை ;

துணைநிலை ஏவுநர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 11,400 தொடங்கி ரூபா 240 கொண்ட 8 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 13,320 வரை ;

ஏவுநர்.—ஆண்டொன்றுக்கு ரூபா 15,000 தொடங்கி ரூபா 360 கொண்ட 7 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 17,520 வரை.

(ஆ) பின்வரும் படிகளும் வழங்கப்படும் :—

(i) கடற்படைச் சம்பளக் கோவைக்கிணங்கத் தகைமைப்படி வழங்கப்படும் ;

(ii) கோலவுடைப்படி பின்வருமாறு வழங்கப்படும் :—

வெப்பமண்டலப் பகுதிக் கோலவுடைக்காக ரூபா 1,000 தொடக்கப்பணமாக வழங்கப்படும். அத்துடன் மாதமொன்றுக்குக் கோலவுடை பேணற்படியாக ரூபா 25 வழங்கப்படும். பயிலுநர் அலுவலர்க்கு சகல உடைகளும் கடற்படைச் செலவில் வழங்கப் பெறுவதோடு ஆணை வழங்கப்பட்ட பின்னர் மட்டுமே கோலவுடை பேணற்படிக்கு அவர்கள் உரித்துடையவராவர் ;

(இ) திருமணமானதும் அரசாங்க விதிநாசாரப்படி திருமணமானோர்க்குரிய படி வழங்கப்படும். பிரிந்திருத்தற்கான படியும் வேலையாளுக்கான படியும் கடற்படைச் சம்பளக் கோவைக்கிணங்க வழங்கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ள, 1950 டிசெம்பர் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிகள் சேவை நிபந்தனைகளாகப் பொருந்தும் ;

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் சகாயநிதி நன்கொடைக்கு உரித்தாவதோடு தங்கள் சம்பளத்தில் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும் விகிதமொன்றை ஆயுதந்தாங்கிய சேவைகள் சகாய நிதிக்கு இறுக்கவேண்டும். ஓய்வூதியமோ பணிக்கொடையோ கொடுக்கப்படமாட்டா. அவ்வாறாயினும் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் பயிலுநர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திகதிக்கு முன் இலங்கைக் குடியரசில் ஓய்வூதியப் பதவியொன்றை வகித்தாராயின், அவர் காலத்துக்காலம் திருத்தப்பட்டவாறுள்ளதும் 1962 டிசெம்பர் 7 ம் திகதிய 13,423 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கடற்படை ஓய்வூதியமும் பணிக்கொடையும் என்ற நியதிப்படி ஓய்வூதிய உரிமைகளுக்கு உரித்துடையவராவர் ;

(இ) இலங்கைக் கடற்படை அலுவலர்கள் எந்நேரத்திலாவது உலகின் எப்பாகத்துக்கும் கடமையின் பொருட்டோ அல்லது பயிற்சியின் பொருட்டோ அனுப்பப்படலாம் ;

(ஈ) புதிதாகச் சேர்பவர்கள் அரசகரும மொழிக் கொள்கை இணங்க குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமென இதுவரை ஆக்கப்பட்டனவும் இனிமேல் ஆக்கப்படக்கூடியனவுமான எவையேனும் விதிகளுக்கு இணங்கி ஒழுகப்பணிக்கப்படுவார்கள் ;

(உ) கீழே 7 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு ஒரு உறுதியுரையில் கையொப்பமிடுமாறு பெற்றோர்/அல்லது பாதுகாவலர் வேண்டப்படுவதுடன் அவைகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இவ்வபேட்சகர் பதவி பெறுவதற்கு முன்பு இலங்கை குடியரசுடன் உறுதியுரை மூலம் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டப்படுவர்.

6. விண்ணப்பதாரரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரையில் கையொப்பமிடவேண்டும்.

(அ) நான் இலங்கைக் கடற்படையில் பயிலுநர் பயிற்சி விண்ணப்பதாரர்........என்பவரின் பெற்றோர்/பாதுகாவலர் ஆவேன் ;

(ஆ) மேற்கூறப்பட்ட பெயருடைய விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இலங்கையில்/வெளிநாட்டில் பயிற்சி நெறி ஒன்றுக்குச் சமூகமளிக்க நான் இத்தால் பின்வருமாறு பொறுப்பு எடுப்பேன் :—

(i) எல்லாப் பிரத்தியேகச் செலவுகள் அதாவது பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரர் மீது ஏற்படக்கூடிய செலவுகளுக்கு

(ii) மேலே குறிப்பிட்ட பெயருடைய விண்ணப்பதாரர் தான் பயிற்சிக் காலத்தின்போது ஆணைபெற்ற பரீட்சார்த்திய நிலையைத் தன் விருப்பப்படி நிறுத்தும் போது இலங்கைக் குடியரசுக்கு அவர்மீது ஏற்படும் செலவுகளை மீள அளித்தற்கு ;

(iii) மேலே குறிப்பிட்ட பெயருடைய விண்ணப்பதாரர் தன் பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலாவது ஆணைவழங்குவதற்குத் தகுதியற்றவரெனப் பொறுப்புள்ள அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டால் (ஒழுக்கமற்ற காரணங்கள் அல்லது அவருடைய கட்டுப்பாட்டுக்குட்பட்ட வினைவுகள்) இலங்கைக் குடியரசுக்கு அவரால் ஏற்படும் செலவுகளை மீள அளித்தற்கு.

..............................
கையொப்பம்.

பெரிய எழுத்துக்களின் பெயரும் முகவரியும் :

திகதி : சாட்சியின் கையொப்பம் :

பெரிய எழுத்துக்களில் பெயரும் முகவரியும் :

திகதி :

7. விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்துரைகள் :

கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பங்கள் கையெழுத்தில் தயாரிக்கப்படுவதுடன் கடற்படைத் தளபதி, இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகம், த.பெ. இல. 593, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்குமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

8. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் உத்தியோகத்தர் தெரியப்படின் அவர் அங்கிருந்து விடுவிக்கப்படுவார் என்றும் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) கல்வி, தொழில் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ; அத்துடன் ;

(இ) குறைந்தது இரண்டு சான்றிதழ்கள், விண்ணப்பதாரரை நன்கு நேரில் அறிந்த பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து, அவர்களில் ஒருவர் விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற கல்லூரியின் அதிபராயிருத்தல் வேண்டும்.

10. குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து ஆரம்பத் தெரிவு ஒன்று செய்யப்படும். ஆரம்ப நேர்முகப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள், கடற்படைச் சேவைக்கு அவர்கள் தகுதியானவர்களெனக் கண்டுகொள்வதற்கென விசேட சார்புத் தேர்வு ஒன்றுக்குத் தோற்றும்படி பணிக்கப்படுவர். அதன் மேல் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தெரிவுச் சபை ஒன்றினால் நேர்முகப்பரீட்சை ஒன்றின்மூலம் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு அத்தகைய நேர்முகத்தேர்வுக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பான போக்குவரத்து அல்லது வேறு செலவுகள் இலங்கைக் குடியரசினால் கொடுக்கப்படமாட்டா.

டீ. பீ. குணசேகர,
கொமடோர்,
கடற்படைத் தளபதி.

இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

## இலங்கைக் கடற்படை—அலுவலர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

2. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

3. நாட்டினம் : (பிறப்பினுலா அல்லது பதிவினுலா இலங்கைப்பிரசை என்பதைக் குறிப்பிடுக. பதிவினுலாயின் சான்றுப்பத்திரத்தின் தொடர் இலக்கமும் திகதியும் தருக) :————.

4. முகவரி :————.

5. பிறந்த திகதி :————. 1974 சனவரி 1 ஆம் திகதி வயது :—
............வருடங்கள் ............ மாதங்கள் ........நாட்கள்

6. கிட்டிய பொலிஸ் நிலையம் :————.

7. தேர்தல் தொகுதி :————.

8. பெயர், பிறந்த இடம், தற்போதைய முகவரி :————.

| | முழுப்பெயர் | பிறந்தஇடம் | தற்போதய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

9. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா? :————.

10. நீர் பாடசாலையில் பெற்ற விளையாட்டுத் திறமைகள் என்ன ?:————.

11. பாடசாலையில் உமது திறமையைக் குறிப்பிடத்தக்க பிற அருஞ்செயல்கள் என்ன ?:————.

12. படைக்கலந்தாங்கிய படைகளில் அல்லது தொண்டர் படைச் சேவையில் அல்லது பயிலுநர் சிறப்பணியில் அல்லது சாரண இயக்கத்தில் முன்னைய சேவை அனுபவம் உமக்கு ஏதும் உண்டா ?:————.

13. இப்பதவி நியமனத்திற்கு வேறு விசேட தகைமைகள் உமக்கு ஏதும் உண்டா ?:————.

14. படைக்கலந்தாங்கிய சேவைகள் எதற்காவது முன்னர் நீர் விண்ணப்பித்தது உண்டா ? அப்படியாயின் பெறுபேறுகள் என்ன ?:————.

15. உமது பாடசாலை நிலைபற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக :————.

| பாடசாலையின் பெயர் | திகதி | | சித்தியெய்திய பகிரங்கப் பரீட்சைகளும் பாடங்களும் |
|---|---|---|---|
| | சேர்ந்த | விலகிய | |
| | | | |

16. பாடசாலையை விட்டு விலகிய திகதியிலிருந்து நீர் ஆற்றிய தொழில் பற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக :—

| வேலை கொள்பவர் பெயர் | வேலையின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

17. நற்சான்றுப்பத்திரங்களைப் பெற்றுள்ள ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் :—

(அ) ..........................................................................................

(ஆ) ..........................................................................................

மேலே கேட்கப்பட்டுள்ள வினுக்களுக்கு என்னுல் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் சரியானவை என்று என் சத்தியத்தின் பேரில் நான் உறுதியளிக்கிறேன். இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளபடி இலங்கைக் கடற்படையில் அலுவலர் வெற்றிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குப் பொருந்தக்கூடிய நடைமுறையையும் விதிகளையும், விசேடமாக அலுவலர்களின் சம்பளத்திற்கும் சேவைக்குமான நிபந்தனைகளையும் சலுகைகளையும் நான் நன்கு படித்துப் புரிந்துகொண்டேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12-936/1—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

**இலங்கைக் கடற்படையில் அலுவலர்க்கான**

**வெற்றிடங்கள்**

இலங்கைக் கடற்படையின் நிரந்தரப் படையின் நிறைவேற்றுக் கிளையில் அலுவலர்க்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்கு இலங்கைக் கடற்படையின் நிரந்தரப்படையில் உதவி–துணை நிலை அலுவலர் பதவி நிலைக்கு நிரந்தர அரசாணையமர்வுகள் அளிக்கப்படும்.

3. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் இலங்கையில்/வெளிநாட்டில் பயிற்சி பெறும்படி வேண்டப்படுவார்கள்.

4. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள்—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விவாகமாகாமலும் 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) (i) பின்வரும் பாடங்களில் 2 திறமைச்சித்திகளுடன் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

தூயகணிதம்
பிரயோக கணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்
தாவரவியல்
விலங்கியல்
அல்லது

(ii) மேலேயுள்ள பாடங்களில் மிகவுயர்ந்த கல்விச் சான்றிதழை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) உடல் தகைமை—
உயரம் 5' 4"
நிறை 110 இரு.
மார்பு (விரியாதநிலை) 32"
தூரப்பார்வை—
கண் ஒவ்வொன்றுக்கும்—6/6 நிறம்காண்தேர்வு—II ஆம் தரம்.

குறிப்பு.—1. விளையாட்டுத்துறைகளில் திறமையுடைய அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. மேலேயுள்ள 4 (அ) விலும் (ஆ) விலும் கேட்கப்பட்டவற்றை உடைய தொண்டர் கடற்படை அலுவலர்கள், வேண்டப்பட்டுள்ள பொருத்தமான கல்வித்தகைமைகளை அல்லது அத்தகைய வேறு தகைமைகளை உடையவர்களாக இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. வைத்திய தராதரம்—அபேட்சகர்கள் கடற்படையினால் வேண்டப்பட்டவாறு வைத்திய தராதரத்திற்கு இணங்குவதுடன் நியமனத்திற்கு முன்னர் கடற்படை ஒழுங்கின் கீழ் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தி பெறவும் வேண்டும்.

5. **சம்பளமும் படிகளும்.**—தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குக் கடற்படைச் சம்பளக் கோவையில் விதிக்கப்பட்டவாறு அவர்களுடைய பதவி நிலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சம்பளமும் படிகளும் நியமன காலத்தின்போது வழங்கப்படும்.

(அ) படைச் சேவைச் சம்பளக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரட்டிய சம்பளவிதிதப்படி அலுவலர் தொடக்கம் ஏவுனர் பதவிநிலை வரையுள் ளவர்க்குப் பின்வருமாறு சம்பளம் வழங்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| உதவி–துணை நிலை அலுவலர் | வருடத்திற்கு ரூபா 7,500 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 180 ஆக 5 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 8,400 வரை. |
| துணை நிலை அலுவலர் .. | வருடத்திற்கு ரூபா 9,240 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 180 ஆக 8 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 10,680 வரை |
| துணை நிலை ஏவுநர் .. | வருடத்திற்கு ரூபா 11,400 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 240 ஆக 8 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 13,320 வரை |
| ஏவுநர் .. | வருடத்திற்கு ரூபா 15,000 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 360 ஆக 7 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 17,520 வரை. |

(ஆ) பின்வரும் படிகளும் வழங்கப்படும்:—

(i) கடற்படைச் சம்பளச் கோவையில் ஏற்படுத்தப்பட்டவாறு தகைமைப் படி வழங்கப்படும்.

(ii) கோலவுடைப் படிகள் பின்வருமாறு வழங்கப்படும்:—அயனமண்டலக் கோலவுடைகளுக்கென ரூபா 1,000 கொண்ட தொடக்க நன்கொடை ஒன்று, அத்துடன் மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 25 வீதம் கோலவுடை பேணற்படி ஒன்று.

(இ) **பிறபடிகள்**—விவாகமானபோது, அரசாங்க விதிதப்படி விவாகப் படி வழங்கப்படும். கடற்படைச் சம்பளக்கோவையில் விதிக்கப்பட்டவாறு பிரிவுப்படியும் அதிகாரி வேலையாட் படியும் வழங்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்.**—(அ) காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1950 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அலுவலர்க்கான ஒழுங்குவிதிகளினால் சேவை நிபந்தனைகள் கையாளப்படும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் சகாய நிதிச்சலுகைகளுக்குத் தகுதியுடையவர்களாக இருப்பதுடன் தங்களுடைய சம்பளத்தில் அரசாங்கத்தால் வேண்டப்பட்டவாறு ஒரு வீதத்தினை அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு அளிக்கும்படி வேண்டப்படுவார்கள். இளைப்பாற்றுச் சம்பளம்/பணிக்கொடை வழங்கப்படமாட்டாது. எனினும், தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகரின் விடயத்தில் அவர் இலங்கைக் கடற்படையில் நியமிக்கப்படும் திகதிக்கு முன்னர் இலங்கை குடியரசின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவி ஒன்றினை வகித்திருந்தால் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1962 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் திகதிய 13,423 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1962 ஆம் ஆண்டின் கடற்படை இளைப்பாற்றுச் சம்பளங்களும் பணிக்கொடைகளுக்குமான கோவை நியதிகளுக்கிணங்க இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பர்.

(இ) இலங்கைக் கடற்படை அலுவலர்கள் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்நேரத்திலும் உலகின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவார்கள்.

(ஈ) புதிதாகச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள எவ்வொழுங்கு விதிக்கும் இனிமேல் ஆக்கப்படும் எவ்வொழுங்கு விதிக்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் இணங்கும்படி வேண்டப்படுவார்கள்.

7. **விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்துரைகள்.**—கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பங்கள் எழுத்தில் தயாரிக்கப்படுவதுடன் கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், த. பெ. இல. 593, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

8. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவருக்கு ஊடாக அனுப்பப்படுவதுடன் அவ்வலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்னும் கடிதம் ஒன்றையும் இணைக்க வேண்டும்.

9. விண்ணப்பங்கள் பின்வரும் பிரதிகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் ,

(ஆ) பெறப்பட்டுள்ள கல்வி, தொழில்பற்றிய தகைமைச் சான்றிதழ்கள்; அத்துடன்

(இ) விண்ணப்பதாரரைத் தனிப்பட்ட முறையில் நன்கு அறிமுகமான பொறுப்புவாய்ந்த ஆட்களிடமிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள்

10. பொருத்தமான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதர்களுக்கு முதற் தெரிவு ஒன்று நடாத்தப்படும். முதல் நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கடற்படைச் சேவைக்குத் தகுதியா என்பதைப் பரிசோதிப்பதற்காக விசேட உளச்சார்புச் சோதனை ஒன்றுக்குச் செல்லும்படி வேண்டப்படுவார்கள். அதன் பின்னர் நேர்முகப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குப் பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தெரிவுச் சபையினால் இறுதித் தெரிவு நடாத்தப்படும். நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைக்குரிய இடம், திகதி, நேரம் என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ இலங்கைக் குடியரசினால் வழங்கப்படமாட்டா.

டீ. பி. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

இலங்கைக் கடற்படை அலுவலர் வெற்றிடங்களுக்கான

விண்ணப்பம்

1. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. நாட்டினம் : (பிறப்பினாலா அல்லது பதிவினாலா இலங்கைப்பிரசை என்பதைக் குறிப்பிடுக. பதிவினாலாயின் சான்றுப்பத்திரத்தின் தொடர் இலக்கமும் திகதியும் தருக.):————.

3. முகவரி :————.

4. பிறந்த திகதி : 1974 சனவரி இல் வயது :————.
.......... வருடங்கள்...... மாதங்கள் ........நாட்கள்.

5. தேர்தற்றொகுதி :————.

6. கிட்டிய பொலிஸ் நிலையம் :————.

7. பெயர், பிறந்த இடம், தற்போதைய முகவரி :————.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

8. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா ? :————.

9. நீர் பாடசாலையில் பெற்ற விளையாட்டுத்திறமைகள் என்ன ?:————.

10. பாடசாலையில் உமது திறமையைக் குறிப்பிடத்தக்க பிற அருஞ் செயல்கள் என்ன ? :————.

11. படைக்கலந்தாங்கிய படைகளில் அல்லது தொண்டர் படைச் சேவையில் அல்லது பயிலுநர் சிறப்பணியில் அல்லது சாரண இயக்கத்தில் முன்னைய சேவை அனுபவம் உமக்கு எதும் உண்டா ? :————.

12. இப்பதவி நியமனத்திற்கு வேறு விசேட தகைமைகள் உமக்கு எதும் உண்டா ? :————.

13. படைக்கலந்தாங்கிய சேவைகள் எதற்காவது முன்னர் நீர் விண்ணப்பித்தது உண்டா ? அப்படியாயின் பெறுபேறுகள் என்ன ? :————.

14. உமது பாடசாலை நிலைபற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக :——

| பாடசாலையின் பெயர் | திகதி | | சித்தியெய்திய பகிரங்கப் பரீட்சைகளும் பாடங்களும் |
|---|---|---|---|
| | சேர்ந்த | விலகிய | |
| | | | |

15. பாடசாலையை விட்டு விலகிய திகதியிலிருந்து நீர் ஆற்றிய தொழில் பற்றிப் பின்வரும் விபரங்களைத்தருக :————.

| வேலை கொள்பவர் பெயர் | வேலையின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

16. நற்சான்றுப்பத்திரங்களைப் பெற்றுள்ள ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் :————.

(அ) ..................................................

(ஆ) ..................................................

மேல் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் சரியானவை என்று என் சத்தியத்தின் பேரில் நான் உறுதியளிக்கிறேன். இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளபடி இலங்கைக் கடற்படையில் அலுவலர் வெற்றிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குப் பொருந்தக் கூடிய நடைமுறையையும் விதிகளையும் விசேடமாக அலுவலர்களின் சம்பளத்திற்கும் சேவைக்குமான நிபந்தனைகளையும் சலுகைகளையும் நான் நன்கு படித்துப் புரிந்துகொண்டேன்.

————.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12–936/2—28.12.73 ந் திகதிய வர்தமானி இல. 92

---

## நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை

### காதியின் பதவி

1965 ஆம் ஆண்டின் 1 ஆம், 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் செய் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான (115 ஆம் அத்தியாயமான) முஸ்லீம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தின் ஹறிஸ்பத்று, தும்பனே அரசிறைப் பிரவுகளின் காதியின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பதாரிகள் ஆண் முஸ்லிம்களாகவும், இலங்கைப் பிரஜைகளாகவும், முப்பத்தைந்து வயதிற்குட்படாதவர்களாகவும், நல்ல ஒழுக்கமும் நல்ல நிலையிலும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

3. அமைச்சரவையினால் தெரியப்படுபவர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும் ஒரு காலவெல்லைக்கு நியமிக்கப்படுவர்.

4. ஒரு காதி எப்பிரதேசத்துக்கென நியமிக்கப்படுகிறாரோ அவர் அப்பிரதேசத்திலேயே வசிக்கக் கடப்பாடுடையர்.

5. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். அவை 1974 ஜனவரி 29 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும்.

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச் சேவைகள் ஆலோசனைச்சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை,
ஒழுக்காற்று சபைகள் அலுவலகம்,
தபாற் பெட்டி 573,
சி/52, கெப்பிட்டிப்பொல வீதி,
கொழும்பு 5,
18 டிசம்பர் 1973.

12–1033—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

## சௌக்கிய அமைச்சு

சௌக்கிய சேவைகள் திணைக்களத்தின் பிரதி நிருவாகத் தர மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு சௌக்கியத் திணைக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சௌக்கிய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டிய இந்த விண்ணப்பங்கள் முடிவுத் திகதி 1974 ஜனவரி மாதம் 21 ஆந் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இதன்கீழ் ஒப்பமிட்டிருப்பவருடன் தொடர்பு கொள்ளவும். கடிதத் தொடர்புகள் இந்த உத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கு விலாசமிடப்பட்டிருத்தல் கூடாது.

பி. கே. டிசநாயக்க,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
செயலாளருக்காக,
சௌக்கிய அமைச்சு.

சௌக்கிய அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
த. பெ. இலக்கம் 500,
கொழும்பு 1,
1973 டிசம்பர் 17 ந் திகதி.

12–925—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

### கல்வி அமைச்சு—மோட்டோர் மடுவ முகாரி பதவி

கல்வி அமைச்சு மோட்டோர் மடுவத்திலுள்ள முகாரி பதவிக்கு கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களிலும் நிலையங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அபேட்சகர்களிடமிருந்தும் வெளி அபேட்சகர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு, "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாரி பதவிக்கான விண்ணப்பம்" என அடையாளமிடப்பட வேண்டும்.

2. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பளம் பின்வருமாறு :—

ரூ. 4,152—16×144—ரூ. 6,456/-. ரூ. 5,304/- என்ற சம்பளப் படியை அடையமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

(1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 1,860—16×120—ரூ. 3,780. ரூ. 2,820 என்ற சம்பளப் படிக்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு).

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பகிரங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். 31.12.71 க்கு முன் நிரந்தர, உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் உபகாரச் சம்பள உரித்தைத் தொடர்ந்து அனுபவிப்பார்.

(i) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்தின்பொருட்டு புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராகக் கருதப்படின் தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(ii) அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர, உபகாரச் சம்பள உரித்துடைய ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவருடைய நியமனம் பதில் கடமை முறையில் அமையும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் துவீபத்தின் எப்பகுதியிலும் கடமைபுரிய வேண்டும்.

(iv) நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

4. தகவுத்திறன்—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருப்பதாகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திர அல்லது 8 ஆந் தரப் பரீட்சையில் சித்தி அடைந்திருப்பதுடன் அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் நிலையம் ஒன்றில் மோட்டார் இயந்திரத் தொழில்நுட்பத்தில் 15 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இவ்வனுபவத்தில் குறைந்தபட்சம் 5 வருடம் "முகாரி" பதவியிலாக இருக்க வேண்டும் ; அல்லது

(iv) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/தமிழ்மொழி, எண்கணிதம்/கணிதம் ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி எய்தியிருப்பதுடன் அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் நிலையம் ஒன்றில் மோட்டார் இயந்திரத் தொழில்நுட்பத்தில் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(v) பௌதிகவியலுடன் சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம், பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி எய்தியிருப்பதுடனும் கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் (பொறிமுறை எந்திரவியல்) தராதரப் பத்திரம் அல்லது எந்திரவியல் நுண் தொழிலாளர் (பொறிமுறை. உற்பத்தி) அல்லது (பொறிமுறை தன்னியக்கவியல்) தராதரப் பத்திரம் அல்லது தொழில்நுட்பவியலிலான தேசிய தகுதித் தேர்வு (பொறிமுறை உற்பத்தி) அல்லது (பொறிமுறை தன்னியக்கவியல்) தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் நிலையம் ஒன்றில் மோட்டார் இயந்திரத் தொழில்நுட்பத்தில் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(vi) கல்வி அமைச்சின் கீழ், வருடாந்தம் ரூ. 3,450—12×90—ரூ. 4,530/- என்ற திரட்டிய சம்பள விகிதத்தை தெரிவுத் தரத்திலான ஒரு பதவியில் பெறுபவராகவும் மோட்டார் தொழில்நுட்பப் பதவி ஒன்றில் 5 வருடத்துக்குக் குறையாது உட்பட மோட்டார் வாகனங்களைப் பேணுவதிலும் பழுதுபார்ப்பதிலும் 15 வருடத்துக்குக் குறையாத செயல்முறை அறிவும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும் ; மேலும் அங்கீகக்கப்பட்ட வேலைக்களத்தில் அல்லது அரசாங்க திணைக்களத்தில் தொழிலாளரை மேற்பார்வை செய்வதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள தகுதிவாய்ந்த அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலே விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தாமதத்துக்கான போதிய காரணத்தைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. தெரிவு செய்யும் விடயத்தில், பின்வரும் முறையில் முன்னுரிமை வழங்கப்படும் :—

(அ) கல்வி அமைச்சின் கீழுள்ள சகல நிலையங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் ;

(ஆ) கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் ;

(இ) வெளி அபேட்சகர்கள்.

7. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம். (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டக் கைந்நூலின் நோக்கங்களின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வி அல்லது உயர்தொழில் சான்றிதழ்.

(இ) செயல்முறை அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி (IIஅ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் குறித்த அறிவித்தலைப் பெறத்தவறும் எவ்விண்ணப்பதாரியும் அது பற்றி கல்வி அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடர்பு இல. பொ. நி. 6/17
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2, 1973 டிசெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**முகாரி பதவி—கல்வி அமைச்சு மோட்டோர் மடுவம்**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) :————.

2. நிரந்தர முகவரி :————.

3. சொந்த இடம் :————.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :————.
   பிறந்த திகதி :————.

5. பின்வருவோர் பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் :————.

6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசை :————.

7. கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :
(i) பொது : சி. பா./க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் சித்தி எய்திய பாடங்கள் பற்றிய விபரங்கள் :

| முதலாவது தோற்றம் | இரண்டாவது தோற்றம் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |
| 7. | 7. |
| 8. | 8. |

(ii) உயர்தொழில்/தொழில்நுட்ப அல்லது இவ்விரு வகைத் தகைமைத் தராதரப் பத்திரங்கள் பற்றிய விபரங்கள் :————.

(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த அதியுயர்ந்த பரீட்சை பற்றிய விபரங்கள் :————.

(iv) பெற்றுள்ள, மோட்டார் வாகனம் ஓட்டுதற்கான அனுமதிப் பத்திரம் பற்றிய விபரங்கள் :————.

8. அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் கீழான சேவை பற்றிய விபரங்கள் (சேவை செய்த நிலையத்தின் பெயர், சேவைக் காலம், வகித்த பதவி ஆகியவற்றைக் கொடுக்கவும்) :————.

9. விவாகம் செய்தவரா/செய்யாதவரா/தாரமிழந்தவரா :————.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி (ஆ) வழக்கு எண் (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

11. உம்மீது யாதேனும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் அது பற்றிய விபரங்கள் கொடுக்கவும் :————.

12. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகமும் :—
(i) வகித்த பதவிகள் :————.
(ii) சேவைக்காலம் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

13. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமையை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேவைக்காலம் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

14. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—
(i) நிலையத்தின் பெயர் :————.
(ii) பதவியும் பதவியின் தரமும் :————.
(iii) நியமனத் திகதி :————.
(iv) உபகாரச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா அல்லது சமயோசிதமா ? :————.
(v) சகாயப்படிகள் நீங்கலாக தற்போதைய வருடாந்தச் சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் :————.
(vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

15. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

**திணைக்கள/நிலையத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல்**

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி. 6./17

செயலாளர்,
கல்வி அமைச்சு,

* இவ்விண்ணப்பம், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியின் முன்/பின் பெற்றுக் கொள்ளப்பட்டது. விண்ணப்பத்தில் .................. ஆம் பந்திகளில் கொடுபட்டுள்ள விபரங்கள் * /பின்வரும் திருத்தங்களுக்கு அமையச் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.......................
.......................

திகதி :————.

**திணைக்கள/நிலையத் தலைவரின் ஒப்பம்.**

பதவிப்பெயர் :————.

* பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

12–933—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

**மலேசியா அரசாங்கத்தால் வழங்கப்படும் பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1974 ஆம் ஆண்டு**

மேற்படி விடயம் பற்றி 1973.12.7 ஆந் திகதி வெளிவந்த 89 ஆம் இலக்கக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலைப் பார்க்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதி 1973.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : வெ.மு/4/172
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு,
1973.12.19.

12–1029—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### தெகிவலைப் பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் 1974 ஆம் கழக வாண்டு நடாத்தப்படும் ஆங்கிலத்திலான இரு-வருட பகல் முழுநேர தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

தெகிவலைப் பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் ஆங்கிலத்திலான இரு-வருட பகல் முழுநேரத் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு தகுதிவாய்ந்த அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இப்பயிற்சி நெறியைப் பின்பற்ற விரும்பும் அபேட்சகர்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக்கமைய விண்ணப்பங்களைத் தயாரித்து தெகிவலைப் பல்தொழில் நுட்ப நிறுவன அதிபருக்கு 21.1.1974 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

3. தகவுத்திறன்

அபேட்சகர்கள்—

(அ) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ஆ) 1.1.74 அன்று 17 வயதுக்குக் குறைந்தவராய் இருக்கலாகா.

(இ) கல்வித் தகைமைகள்.—அபேட்சகர்கள் க.பொ.த. (உயர் தர) பத்திரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் க.பொ.த. (சா.தர) பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் 'அ' பாடத்திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் சித்தி அல்லது ஆங்கில மொழியில் 'ஆ' பாடத்திட்டத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

4. மாணவர்களின் தெரிவு ஓர் எழுத்துமூலப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறும்.

ரி. ஓ. பி. பர்ணந்து,
கல்விப்பணிப்பாளர் (தொழில்நுட்பக் கல்வி),
கல்வி மா அதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
18.12.1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### தெகிவலை பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறும் ஆங்கிலத்திலான இரு-வருட பகல் முழுநேர தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் (தெளிவாக எழுதவும்) :———.
2. அஞ்சல் முகவரி :———.
3. பிறந்த திகதி :———.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. 1.1.74 அன்றுள்ளபடி வயது :— வரு :——— மா :——— நாள் :———.
5. சாதியம் :———.
6. பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் : ———.
7. கல்வி கற்ற இடைநிலைப் பாடசாலையின் பெயரும் முகவரியும் ———.
8. பாடங்கள், பெறுபேற்றுத் தரங்கள் ஆகியவற்றுடன் சித்தி எய்திய பரீட்சைகள் (விசேட/திறமை/சாதாரண சித்தி எனக் காட்டப்பட வேண்டும்) :—

| (அ) க.பொ.த. (உயர்தர) | (ஆ) க. பொ. த. (சா. தர) |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| | 5. |
| | 6. |

———,
அபேட்சகரின் ஒப்பம்.

திகதி :———.

12 1027—28 12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

### பரீட்சைத் திணைக்களம், இலங்கை

#### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை
#### குடியியல்—பாடத்திட்டம்

1974 டிசெம்பர் பரீட்சையிலிருந்து குடியியல் பாடத்திட்டம் பின் வருமாறு மாற்றப்பட்டுள்ளதென்பதை எல்லாப் பாடசாலைகளின் தலைவர்கட்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வினாத்தாள் 3 பகுதிகளாகப் பிரிக்கப்படும் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பகுதியிலுமிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மொத்தம் 5 வினாக்களுக்கு 3 மணி நேரத்தில் விடையளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எந்த ஒரு பரீட்சார்த்தியும் எந்த ஒரு பகுதியிலிருந்தும் 2 வினாக்களுக்கு அதிகமாக விடையளித்தலாகாது. ஒவ்வொரு பகுதியும் 4 வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் பற்றி விசேடமாகக் குறிப்பிட்டாலன்றி உள்ளூர் நிறுவனங்களைப் பற்றி மாத்திரம் கற்றல் எதிர்பார்க்கப்படுகிறது. மக்களின் நாளாந்த வாழ்க்கை தொடர்பாக இந்நிறுவனங்கள் கொண்டுள்ள பங்கு பற்றி விசேட கவனம் செலுத்தப்படும் அதே வேளையில் இந்நிறுவனங்கள் பற்றிய படிப்பு தலைப்புச் சார்ந்ததாக இருக்கவேண்டும். மேலும் இயன்றளவுக்கு இந்நிறுவனங்கள் பற்றியவோர் ஒப்பியற் படிப்பு மேற் கொள்ளப்பட வேண்டும். இந்நிறுவனங்கள் அமைந்திருக்கும் நாடுகளின் வரலாறு, புவியியல் சம்பந்தப்பட்ட காரணிகள் இப்படிப்புக்குப் பின்னணியாக அமையவேண்டும். சமுதாயத்துக்கான பணி தொடர்பாக விஞ்ஞானரீதியிற் சிந்தித்தற்கு மாணவர்கள் எந்த அளவிற்குப் பயிற்சிபெற்றுள்ளனர் என்பதைச் சோதிப்பதற்கும் வினாக்கள் தயாரிக்கப்படும்.

அரசாங்கங்களின் அமைப்புக்கள் பற்றிய அறிமுறை அறிவு எதிர்பார்க்கப்படமாட்டாது. ஆயினும் உடன் நிகழும் மாற்றங்கள் பற்றிய பின்னணி அறிவுடன் பின்வருவனபற்றிப் படிக்க வேண்டும் :—

#### பகுதி I—மக்கட் சமுதாயம்

(அ) மக்கட் சமுதாயத்தின தேவைகள்—உணவு, உறையுள், சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி, தொழில் முதலியன. இவற்றின் ஏற்பாடு தொடர்பாக அரசினதும் குடிமக்களினதும் உரிமைகளும் கடமைகளும்.

(ஆ) சமுதாயத்தின் தேவைகளை வழங்கும் நிறுவகங்கள்.
- (1) அரசு—திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும்.
- (2) கூட்டு நிறுவகங்கள்—கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், வேறு தொண்டர் நிறுவகங்கள் ஆகியன.
- (3) தனியார் துறை.

(இ) பொருளாதார அபிவிருத்தியின் குறிக்கோள்களும், இவற்றை எய்தலில் அரசு, கூட்டு நிறுவகங்கள், தனியார் துறை ஆகியவற்றின் பொறுப்பும்.

(ஈ) குடியாட்சிச் சமுதாயமொன்றின் அடிப்படைச் சிறப்பியல்புகள்.

#### பகுதி II—இலங்கை ஒரு குடியரசாக

1. இலங்கையில் ஒரு குடியரசை நிறுவியமை—இதுபற்றிய சுருக்கமான வரலாற்றுப் பின்னணி (சோல்பரி அரசமைப்பைப் பற்றிய பொது அறிவு வேண்டப்படும்).
2. வாக்காளர்கள், தேர்தற்றொகுதிகள், அரசியற் கட்சிகள், தேர்தல்கள் ஆகியன.
3. தேசிய அரசுப் பேரவை—அதிற் சட்டமியற்றப்படும் முறை, சபாநாயகர், அவை முதல்வர், எதிர்க் கட்சி முதல்வர்.
4. பிரதம அமைச்சரும் அமைச்சரவையும்.
5. ஜனாதிபதி

6. நிர்வாக அமைப்பு—குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இது கொண்டுள்ள பங்கு.

7. நீதித்துறை—நீதித்துறையின் அமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் ஆகியனவும் அதன் சுதந்திரமும்.

8. உள்ளூராட்சி நிர்வாகம்—

(1) மாவட்ட நிர்வாகம்—அரசாங்க அதிபர், பகுதி அரசிறை அலுவலர்கள் (காரியாதிகாரிகள்), கிராம சேவகர்கள், ஏனைய அலுவலர்கள் ஆகியோர்.

(2) உள்ளூராட்சிச் சபைகள்.

(3) ஏனைய நிர்வாக நிலையங்கள்—இணக்கச் சபைகள், மக்கள் குழுக்கள், மாவட்ட இயைபுபடுத்தற் குழுக்கள், மாநில அபிவிருத்திச் சபைகள் முதலியன.

பகுதி III—இலங்கை, உலகச் சமுதாயத்தின் ஓர் உறுப்பு நாடாக

1. இலங்கை—ஐக்கிய நாடுகளின் நிறுவகத்தின் ஓர் உறுப்பு நாடாக. இங்கு மக்கள் நலனுக்கு உகந்த முறையில். மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் நிறுவகமாகக் கருதி ஐ. நா. நிறுவகம் பற்றிப் படித்தல்.

(அ) ஐ. நா. நிறுவகம்—அதன் குறிக்கோள்களும் கொள்கைகளும்- ஐ. நா. நிறுவகத்தின் பட்டயம் பற்றிய பொது அறிவு. இங்கு, மனித உரிமைகள் பிரகடனம் பற்றிச் சிறப்பாகப் படிக்க வேண்டும்.

(ஆ) ஐ. நா. நிறுவகமும் அதன் பிரதான பிரிவுகளும்—பொது மன்றம், பாதுகாப்பு அவை, பொருளாதார, சமூக அவை, நம்பிக்கைப் பொறுப்பு அவை, சர்வதேச நீதிமன்றம், செயலகம் ஆகியன.

(இ) ஐ. நா. நிறுவகத்துடன் இணைந்த சபைகளும் விசேட நிறுவனங்களும்—ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவகம் (யூனெஸ்கோ), உணவு விவசாய நிறுவகம், உலகச் சுகாதார நிறுவகம், சர்வதேச தொழில் நிறுவகம், ஆசியாவுக்கும் தூர கிழக்குக்குமான பொருளாதார ஆணைக்குழு (எக்காபே), சர்வதேச நாணய நிதி, உலக கல்வி (மீளமைப்பு) க்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி ஆகியன.

2. இலங்கை பிறநாடுகளுடன் கொண்டுள்ள தொடர்புகள்—வெளிநாட்டுக் கொள்கை—தூதர் (சூழியல்) சேவை.

3. இலங்கை உறுப்பு நாடாகவுள்ள ஏனைய சர்வதேச நிறுவகங்கள்— பொதுநலவரசு—கூட்டுச் சேரா நாடுகளின் மன்றம்.

பொகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு-2,
1973.12.18.

12-1027—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

**பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பில் ''அ'' பிரிவுக்கு நியமிப்பதற்கான பரீட்சை—நொவம்பர் 1973**

1973 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 24 ஆந் தேதி நடைபெறவிருந்து பின்பு பிற்போடப்பட்ட மேற்படி பரீட்சை 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் தேதி நடைபெறும என இத்தால் சகல பரீசார்த்திகட்கும் அறிவிக்கப்படுகின்றது.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழு பு 2,
1973 டிசெம்பர் மாதம் 19 ஆந் திகதி.

12-1030—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல் களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1974

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 4.1.74 | வெள்ளி .. | 26.12.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 11.1.74 | வெள்ளி .. | 2. 1.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 18.1.74 | வெள்ளி .. | 9. 1.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 25.1.74 | வெள்ளி .. | 16. 1.74 | புதன் | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** .. | 1.2.74 | வெள்ளி .. | 23.1.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 8.2.74 | வெள்ளி .. | 30.1.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 15.2.74 | வெள்ளி .. | 5.2.74 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 22.2.74 | வெள்ளி .. | 13.2.74 | புதன் | ந. ப. 12.00 |
| **மாச்சு** .. | 1.3.74 | வெள்ளி .. | 19.2.74 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 8.3.74 | வெள்ளி .. | 27.2.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 15.3.74 | வெள்ளி .. | 6.3.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 22.3.74 | வெள்ளி .. | 13.3.74 | புதன் | ந. ப. 12.00 |
| | 29.3.74 | வெள்ளி .. | 20.3.74 | புதன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யு. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 21 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.